# பசுமைப் போராளி...

நமது நிருபர்

**சென்னை, ஜூன் 18:** தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு, 'பசுமைப் போராளி' என்ற விருதை குடியரசு துணைத் தலைவரிடம் பெற்றிருக்கிறார் யோகநாதன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையைச் சேர்ந்த அவர், அரசு பஸ் நடத்துநராக உள்ளார். சுற்றுப்புறச் சூழல் தினத்தை ஒட்டி, அவருக்கு மத்திய அரசு விருது அளித்துள்ளது. இதுகுறித்து, அவர் கூறியது:-

பள்ளியில் படிக்கும் போது, இயற்கையை ரசித்துக் கொண்டே கவிதைகள் எழுதுவது பிடிக்கும். பள்ளிப் படிப்பின் இறுதி கட்டத்தை எட்டும் போது, கவிதையின் மேல் இருந்த மோகம் இயற்கையின் மீதும் தொற்றிக் கொண்டது. நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் எனது சகோதரியின் வீடு உள்ளது. விடுமுறை நாள்களில் அங்கு செல்வது வழக்கம். அப்போது, அங்குள்ள காடுகளில் திருட்டுத் தனமாக மரங்கள் வெட்டப்படுவது வாடிக்கையாக இருந்தது.



இதை சிறுவனாக இருக்கும் போதே தட்டிக் கேட்பேன். மரம் கடத்தப்படும் லாரியின் முன்பு நானும் எனது நண்பர்களும் படுத்துக்கொண்டு மறியல் செய்வோம். இப்படி, இயற்கையின் மீது நான் கொண்ட காதல் மெல்ல மெல்ல வளர்ந்தது.

**மாணவர்களின் மனதில்...** நல்ல மண்ணில் விதை போட்டால் மரங்கள் சிறப்பாக வளரும் என்ற நம்பிக்கையில், இயற்கை குறித்த விழிப்புணர்வை மாணவர்களின் மனதில் விதைக்க எண்ணினேன். அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு பள்ளியாகச் சென்று இயற்கை குறித்தும், மனிதன் அதை எவ்வாறு அழித்து வருகிறான் என்பது குறித்தும் விளக்கப் படங்கள் போட்டுக் காண்பித்தேன். இதற்கு மாணவர்கள் மத்தியில் பெறும் வரவேற்புக் கிடைத்தது.

இயற்கையைக் காப்பாற்றுவது சரி, எனது மனைவியையும், இரண்டு பெண் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டுமே... அதற்காக அரசு பஸ் நடத்துநர் பணியில் சேர்ந்தேன். முதலில், எனது முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்காத போக்குவரத்துத் துறை அதிகாரிகள், பின்னர் என்னைப் புரிந்து கொண்டனர்.

சிறுவயதில் இருந்தே, மரங்களை நடும் பழக்கம் கொண்டிருந்தேன். அவற்றின் எண்ணிக்கை தற்போது 36 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. அந்த மரங்கள் அத்தனையும் நன்கு வளர்ச்சி பெற்று நிழல் தந்து கொண்டிருக்கின்றன. பள்ளிகள் உள்பட பல்வேறு இடங்களில் அவை நடப்பட்டுள்ளன என்றார் யோகநாதன்.

**பசுமைப் போராளி விருது...** இயற்கை மற்றும் மரங்கள் மீது யோகநாதன் வைத்த பாசத்தை அறிந்து, மத்திய அரசு 'பசுமைப் போராளி' என்ற விருதினை அளித்துள்ளது.

கடந்த மார்ச் 5-ம் தேதி தில்லியில் நடை பெற்ற விழாவில், குடியரசு துணைத் தலைவர் இந்த விருதினை யோகநாதனுக்கு வழங்கினார். "விருது வாங்கிய கையோடு, தில்லியில் உள்ள பூங்காவுக்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கு, ஒரு மரக்கன்றை நடும்படி கேட்டுக் கொண்டனர். விருது பெற்றதை விட, பெரிய மகிழ்ச்சியாக அந்தத் தருணத்தைக் கருதினேன். அதுதான் எனக்குக் கிடைத்த மாபெரும் விருது" என்றார் யோகநாதன்.

தினமணி - சென்னை - 19. ஜூன் 2008